**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 313/2006</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜா முகம்மது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **26.11.2025** |
| **பெயர்** | **ராஜேஷ்பாபு** |
| **த/பெ** | **இராதாகிருஷ்ணன்** |
| **சாட்சி** | **DW3** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.09.p.m**

**<u>குறுக்கு விசாரணை –</u>**

1. நான் இவ்வழக்கின் 8–ம் பிரதிவாதியாவேன். நான் பி.எ வரை படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். நானும், பிற பிரதிவாதிகளும் ஒரே குடும்பமாக தான் உள்ளோம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் தனிப்பட்ட சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை எதுவும் நடந்ததா என்றால் நடக்கவில்லை. எங்கள் பெயரில் எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் சுமார் 10 ஏக்கர் உள்ளது. இவ்வழக்கில் என் தந்தையான 1ம் பிரதிவாதி எனக்கு முன்னரே சாட்சியம் அளித்தார். 6ம் பிரதிவாதியான சுரேஷ்பாபுவும் சாட்சியம் அளித்தார். மேற்கூறிய 2 சாட்சிகளும் பிற பிரதிவாதிகளுக்காக சாட்சியம் அளிக்காமல் அவர் அவரகளுக்காவே சாட்சியம் அளித்தார்கள் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களின் நிலத்தில் நாங்கள் அத்துமீறக் கூடாது என்று கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு குறித்த விவரம் தெரியுமா என்றால் தோராயமாக தெரியும். சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். விஸ்தீர்ணம் என்ன என்றால் 3 ஏக்கர் 96 செண்ட் நிலம். எத்தனை சர்வே எண்கள் என்றால் இரண்டு சர்வே எண்கள். தாவா சொத்து முதலில் யாருக்கு சொந்தமானது என்றால் பி.வி.எல். நாராயணனின் தாயாருக்கு சொந்தமானது அதன் பிறகு 1ம் வாதியான சாந்தகுமாரிக்கு சொந்தமானது. சாந்தக்குமாரியின் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர்களின் வாரிசுகள் தான் 3 மற்றும் 4ம் வாதிகள் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் 5ம் பத்தியில் 2007ல் என் தந்தை பதிலுரை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3.	எதிரிடை ஸ்வாதீனம் என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் என்றால் எதிர் தரப்பினரின் அனுபவம். இவ்வழக்கின் வாதிக்கு எதிரான நாங்கள் அனுபவித்து வருவது. எந்த வருடத்தில் இருந்து அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்றால் 1987. அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்தை தொடர்ச்சியாக அனுபவித்து வருவதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறானது என்றும், வழக்கு முடியும் வரை தாவா சொத்தில் பிரவேசிக்க கூடாது என்று வாதிகள் எங்களுக்கு எதிராக தடை உத்தரவு வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான்.

4.	அந்த உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்யவில்லை என்றால் செய்யவில்லை. வழக்கு சொத்தை என்படி 1987–ல் இருந்து எதன் அடிப்படையில் அனுபவத்தில் உள்ளேன் என்றால் குத்தகை தாரராகவும் மற்றும் ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் அனுபவத்தில் உள்ளேன். மேற்சொன்ன ஒப்பந்தம் எந்த வருடம் ்ஏற்பட்டது என்றால் 1993 ல் ஏற்பட்டது. மேற்சொன்ன ஒப்பந்தத்தை வைத்து அதனை நிறைவேற்றி கொடுக்க ஏதேனும் தாவா தாக்கல் செய்தோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. இடைக்கால மனு எண் 237/2011 மூலமாக பிரதிவாதிகள் குறிப்பிடும் குத்தகை முச்சிலிக்காவை குறியீடு செய்ய இந்நீதிமன்றம் மேற்சொன்ன மனு தாக்கல் செய்யப்பட்டு 08.07.2011 ல் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனை எதிர்த்து மாண்புமிகு உயர்நீதிமன்றம் முன் மேல் முறையீடு செய்து CRP PD No. 2642/2011 என்று தாக்கல் செய்யப்பட்டடு அதில் இடைக்கால மனுவாக MP 1/2011 தாக்கல் செய்யபட்டு அந்த மனுவும் 29.11.2018 ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் தெரியாது.

5.	தள்ளுபடி செய்யப்படட மனுவிலே எதிரிடை பாத்தியம் கேட்க பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என உத்தரவு இடப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிலும் பிரதிவாதிகள் எதிரிடை உரிமை கோரி மனு செய்திருந்தோம் என்றால் சரிதான். வாதிகளும் இடைக்கால மனு எண் 7/2022 சொத்து மதிப்பு 10 கோடிக்கு மேலாக அரசாங்க மதிப்பீடு என கூறப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. மேற்சொன்ன கணக்கின் அடிப்படையில் ரூ. 15,91,920 தொகையை கட்டணமாக செலுத்த வேண்டி இருந்தது என்றால் சரியல்ல. அரசாங்க மதிப்பீட்டின் படி பிரதிவாதிகள் தான் நீதிமன்ற கட்டனம் செலுத்த இயலவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற கட்டனம் செலுத்தாதபட்சத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல.

6.	அதனால் பிரதிவாதிகள் எதிரிடை ஸ்வாதீன உரிமையை பெற தகுதி அற்றவர்கள் என்றால் சரியல்ல. எங்கள் குத்தகை முச்சிலிக்காவையும் நீதிமன்றம் ஏற்க மறுத்த காரணத்தினால் பிரதிவாதிகள் குத்தகைதாரர்களாக இருக்க முடியாது என்றால் சரியல்ல. 23.11.2006 தேதியிட்ட வா.சா.ஆ 2 ன் மூலம் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம்

செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணத்தின் படி ஸ்வாதீனம் ஒப்படைக்கவில்லை. பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்து குறித்து கிரையம் ஏற்படுத்த எந்த உரிமையும் இல்லை என்றும் வா.சா.ஆ 2 ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை குறித்து விற்கும் சமயத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமையும் இல்லை அவர்கள் ஸ்வாதீன்திலும் இல்லை என்றால் சரியல்ல.என் பிரமாண வாக்குமூலத்தில் 7ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளது போல பிரதிவாதிகள் எந்த நெல்லும் கொடுக்கவில்லை அதற்கான ஆவணமும் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

7. என் பிரமாண வாக்குமூலத்தில் 13ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. 13ம் பத்தியில் குறிப்பிட்டுள்ளது போல் 3ம் பிரதிவாதி முழுமையான கிரைய தொகை கொடுக்காத காரணத்தினால் சொத்தின் ஸ்வாதீனம் எங்களிடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு முழு கிரைய தொகையை 3ம் பிரதிவாதி செலுத்தாத காரணத்தினால் வா.சா.ஆ 2 ஆவணம் செல்லாது என்றும் 3ம் பிரதிவாதிக்கு சொத்தின் மீதான உரிமை சென்றடையவில்லை என்றால் தெரியாது. அந்த பத்திரம் எந்த வகையிலும் வாதிகளின் வழக்கு சொத்தின் மீதான உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

8. என் தந்தை அவரின் சாட்சியத்தில் வா.சா.ஆ 2 ஆவணத்தின் மூலம் கிரைய தொகை பெற்றுள்ளதாக கூறியது தவறு என்றால் தெரியாது. என் தந்தை பொதுவாக பொய் கூற மாட்டார் என்றால் சரிதான். சொத்திற்கான பட்டாவும் 1ம் வாதியின்பெயரில் தான் உள்ளது அதன்படி வழக்கு சொத்தின் அனுபவத்திலும் வாதிகள் தான் உள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமையும் இல்லை, அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.45.p.m.**